<u>பொருளடக்கம் (Index)</u>

ஸனாதன் ஸன்ஸ்தாவின் ஸ்தாபகர் பராத்பர குரு டாக்டர் ஜயந்த் ஆடவலே அவர்களின் காரியங்களின் சிறு அறிமுகம்! 6

நூல் தொகுப்பாளரின் அறிமுகம் 8

சித்திரக்காரர் பூ. (திருமதி) உமா ரவிசந்திரனின் அறிமுகம் 8

முன்னுரை 9

பகவத்கீதை தியான பாட்டு 11

அர்ஜுன விஷாத யோகம் 16

ஸாங்க்ய யோகம் 29

கர்ம யோகம் 52

ஞானகர்ம ஸந்ந்யாஸ யோகம் 68

ஸந்ந்யாஸ யோகம் 83

த்யான யோகம் 95

ஜ்ஞானவிஜ்ஞான யோகம் 114

அக்ஷரப்ரஹ்ம யோகம் 126

ராஜவித்யா ராஜகுஹ்ய யோகம் 138

விபூதி யோகம் 152

விச்வரூபதர்சன யோகம் 170

பக்தி யோகம் 193

க்ஷேத்ரக்ஷேத்ரஜ்ஞவிபாக யோகம் 200

குணத்ரயவிபாக யோகம் 214

புருஷோத்தம் யோகம் 223

தைவாஸுரஸம்பத்விபாக யோகம் 233

ச்ரத்தாத்ரயவிபாக யோகம் 241

மோக்ஷ ஸந்ந்யாஸ யோகம் 252

பகவத்கீதை ஆரத்தி 288

கிராமீய கிருஷ்ண கானம் 288

---

## முன்னுரை (Preface)

## ஸ்ரீகிருஷ்ணார்ப்பணம்

ஸ்ரீகிருஷ்ணன் அருளிய கீதை ஸ்லோகங்கள் சிறு சிறு செய்யுள் (கவிதை) வடிவில் புத்தமாக வெளிவர காரணமாக, அதன் பின்புலனாக இருந்த நிகழ்ச்சிகளை இங்கு நினைவுகூர விரும்புகிறேன். சுமார் 16 –17 ஆண்டுகளுக்கு முன்பாக ஸனாதன் ஸன்ஸ்தா என்ற ஆன்மீக ஸ்தாபனம் என் மகளின் இல்லத்திற்கருகே இயங்க ஆரம்பித்தது. அது முதல் அதன் ஸாதகர்களுடன் தொடர்பு ஏற்பட்டது. அவர்கள் நடத்தும் ஸத்ஸங்கங்களில் தவறாமல் கலந்து கொள்ள ஆரம்பித்தேன். தமிழ் மொழி தெரிந்த ஸாதகர்கள் எண்ணிக்கையில் மிகக் குறைந்த அளவே இருந்ததால் அவர்கள் என்னை வியாழக்கிழமைதோறும் பகவத்கீதை விளக்கங்களை சொல்லும்படி கூறினார்கள். சிறு வயதிலிருந்தே கீதையில் ஓரளவு எனக்கு பரிச்சயம் இருந்தாலும் பிறருக்கு சொல்லக் கூடிய அளவு எனக்கு என்ன தெரியும் என மலைப்பாக இருந்தது. புத்தகங்களைப் படித்து முன்பே சிறிது தெரிந்தவைகளை விரிவுபடுத்திக் கொள்ளலாம் என்றாலும் இயற்கையில் கேட்பதில் உள்ள உற்சாகம், ஆர்வம் பேசுவதில் கிடையாது. சங்கோஜப்படும் சுபாவம் உள்ளவள் நான். இவ்வளவு எண்ண ஓட்டங்கள் எழுந்தாலும், இது ஏதோ தெய்வ ஸங்கல்பம் என்று பகவான் மீது பாரத்தைப் போட்டுவிட்டு 7.7.2005 அன்று துவங்கி வியாழன்தோறும் 18.9.2008 வரை ஸத்ஸங்கத்தில் உரையாற்றினேன். நலவிரும்பிகள் பல புத்தகங்களை கொடுத்து உதவினார்கள். அவைகளிலிருந்து கருத்துக்களைத் தேர்ந்தெடுத்து பலமுறை படித்து உள்வாங்கிக் கொண்டு பயபக்தி, ச்ரத்தையுடன் தயார்ப்படுத்திக் கொண்டேன்.

பிறகு உடல் நலமில்லாமல் ஓரிரு மாதங்கள் ஓய்வில் இருந்தபோது கிருஷ்ணன் கீதையில் சொன்னபடி ‘யந்த்ரா ரூடானி மாயயா’ என்பதற் கேற்ப ஆட்டி வைக்கும் அவன் அருள் திறத்தினால் முன்பு விரிவாகக் கூறியதை சுருக்கமாக செய்யுள் வடிவில் செய்தால் என்ன என்று மனதில் தோன்றியது. அந்த எண்ணத்தின் செயல் வடிவே இன்று இந்த புத்தகமாக உருவெடுத்துள்ளது.

தற்போதைய கால நிலை அவசர யுகமாக உள்ளது. யாருக்கும் எதிலும் விஸ்ராந்தியாக, நிதானமாக ஈடுபட முடியாத சூழ்நிலை உள்ளது. அந்த நிலையில் எளிய தமிழ் நடையில் இருக்கும் இந்த புத்தகம் யாவரும் எளிதில் படித்தும் புரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கும் என நம்புகிறேன். மேலும் ஆன்மீகத்தில் ஈடுபாடும், நாட்டமும் இருந்து ஆரம்ப நிலையில் இருப்போர்க்கு முதல் படியாக இப்புத்தகம் உதவக் கூடும் என நம்புகிறேன். ஆன்மீக மாளிகையின் நுழைவாயிலாக இதை பயன்படுத்தி அந்த மாளிகைக்குள் நுழைந்து பல மஹான்களின் அரிய ஆழ்ந்த கருத்துக்கள் கொண்ட புத்தகங்களைப் படித்து, உன்னத நிலையை, வாழ்வின் லக்ஷியத்தை அனைவரும் அடைய பிரார்த்திக்கிறேன். இதை எழுத வைத்த யோகயோகேச்வரனான, கீதாச்சாரியனான பகவான் ஸ்ரீகிருஷ்ணனின் அருள் திறத்தில் ஆழ்ந்து என் இதயம் கனிந்த நன்றியுடன் அவனின் திருப்பாதங்களில் இதை அர்ப்பணிக்கிறேன்!